மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில்தான் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் நவம்பர் திங்களில் வேலூர், சேலம், திருச்சி, கடலூர், நெல்லை மாவட்டங்களில் புதிதாக நீதிமன்றங்கள் துவக்கப்பட்டு, தொடரப்பட்ட வழக்குகள் தீர்க்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 175, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

175--

கடையக்குடி கிராமத்திலிருந்து சோழகம்பட்டி புகைவண்டி நிலையம் வரை சாலை அமைத்தல்.

*10622 **திரு ப. கலியபெருமாள் :**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், இந்தலூர் ஊராட்சியிலுள்ள கடையக்குடி கிராமத்திலிருந்து சோழகம்பட்டி புகைவண்டி நிலையம் வரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): குறிப்பிட்டுள்ள சாலைப் பணியை போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் எடுத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான திருவையாறு தொகுதியில் உள்ள இந்தலூர் ஊரட்சிக்கு உட்பட்ட கடையக்குடி கிராமத்திலிருந்து சோழம்பட்டி புகைவண்டி நிலையம் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ? அப்படி எனில் அதை நிறைவேற்றித் தருவதற்கு அரசு முன்வருமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் எழுப்பப்பட்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றியம், பூதலூர், இந்தலூர் ஊராட்சியில் உள்ள கடையக்குடி பொறுத்தவரை, சோழகம்பட்டி கிராமச் சாலை அமைக்க மொத்தம் ரூ. 1.20 இலட்சம் தேவைப்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டிற்கு ஜவஹர்

1994 ஜனவரி 5]

வேலைவாய்ப்புத் திட்டத்திலே புதிதாக சாலை அமைக்க நிதி ஒதுக்கம் செய்யப்படாத காரணத்தினாலே இந்தச் சாலையை எடுத்து செப்பனிட முடியவில்லை. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திலே பொது நிதியிலே போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தாலே எடுத்துக்கொள்ளப்பட முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகின்ற நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிராமங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டுமென்று 1979-ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை, இன்று கோடானுகோடி ஏழை மக்களின் இதயத்திலே அன்பு தெய்வமாக வீற்றிருக்கின்ற அன்னையின் ஆட்சியில் இந்த கடையக்குடியில் வாழ்கின்ற 1000 மக்கள்தொகை கொண்ட அளவில், அந்தப் புகைவண்டி நிலையத்திற்குச் செல்வதற்கு 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு வயல் வரப்புகளிலும், கரடுமுரடான பாதைகளிலும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. நோய்வாய்ப்பட்டாலும் அவர்கள் சுற்றி வெகுதூரம் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆதலாலே வருகின்ற 1993-94 ஆம் ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், அதற்கான ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். வருகின்ற நிதியாண்டிலே இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 176-திரு. சோ. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

176--

முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஒன்றியங்களுக்கு வைகையிலிருந்து தண்ணீர் வழங்கும் திட்டம்.

* 17471 **திரு. சோ. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--